LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III
## 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

## ECOS 4102 Research Methodology in Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

01.(அ) "ஆய்வு" என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ஆ) ஆய்வுச் செயன்முறையின் படிமுறைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(இ) முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

02.(அ) ஒரு சிறந்த வினாக்கொத்து ஒன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகளை அடையாளப்படுத்துக. (10 புள்ளிகள்)

(ஆ) பங்குபற்றுகை விழை மதிப்பீடு (Participaray Aprisal) ஒன்றின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு, அதன் செயற்பாட்டுப் பிரயோகம் பற்றி மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

03.(அ) ஏன் ஆய்வு ஒன்றின்போது மாதிரிகள் (Samples) எடுக்கப்படுகின்றன? (10 புள்ளிகள்)

(ஆ) மாதிரியின் பிரதான வகைப்பாடுகளை அடையாளப்படுத்தி அவற்றை விளக்குவதுடன் ஆய்வில் ஏற்படக்கூடிய வழுக்களை (Errors) குறைக்க மாதிரி எடுப்பு முறையில் ஆய்வாளன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைச் சுருக்கமாகத் தருக. (15 புள்ளிகள்)

04.(அ) இணைபுக் குணகப்பகுப்பாய்வு என்பதனால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் இணைபுக் குணகப் பெறுமானங்களுக்கான சிதறல் வரைபடங்களை (Scatter diagram) அமைக்குக.

(i) $r = +1$ (ii) $r = -1$ (iii) $r = 0$ (03 புள்ளிகள்)

(இ) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

(i) நேர் மற்றும் எதிர் இணைபு (Positive and Negative correlation)

(ii) நேர்கோடு மற்றும் நேர்கோடற்ற இணைபு (Linear and Non Linear correlation)

(iii) சாதாரண மற்றும் பல்மாறி சார் இணைபு (Simple and multiple correlation)

(06 புள்ளிகள்)

(ஈ) பின்வரும் - அட்டவணை-1 - விற்பனை நிலையமொன்றில் விளம்பரத்திற்காக ஏற்பட்ட செலவுகளையும் (Advertisement Cost) விற்பனை அளவுகளையும் தருவதாக அமைகின்றது. இவ்விரு மாறிகளுக்கிடையிலான தொடர்பினை கால்பியசனின் (Karl Pearson's) இணைபுக் குணக நுட்பமுறையினடிப்படையில் பரிசீலிக்குக.

**அட்டவணை – 1 விளம்பரச் செலவும், விற்பனையும்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விளம்பரச் செலவு (ரூபா'000) | 15 | 17 | 13 | 11 | 9 | 12 | 18 | 03 |
| விற்பனை (ரூபா'00000) | 80 | 90 | 50 | 40 | 90 | 130 | 70 | 90 |

(13 புள்ளிகள்)

05. "இலங்கையின் புகையிரத சேவையில் நவீனமயமாக்கம்" என்பது பற்றி

**அல்லது**

"மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலை" என்பது தொடர்பாக ஓர் ஆய்வு முன்மொழிவினை தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை தருக.

(அ) ஆய்வில் மாறிகளின் (variables) உபயோகம்.

(ஆ) ஆய்வுசார் வெளியீடுகளின் மீள்பார்வை (Review of literatures)

(இ) ஆய்வில் மையநாட்ட அளவைகளின் (Measures of Central Tendency) பயன்பாடு

********